ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1787/27 - 2012 දෙසැම්බර් මස 05 වැනි බදාදා - 2012.12.05

1787/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 21/78 iv.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான (2011, யூன் 24 ஆந் திகதிய 1711/ 24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளையை அதற்கான அட்டவணையில், அதன் நிரல் I இல் காணப்படும் "முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன்:-

| "நிரல் I | நிரல் II |
| --- | --- |
| பீடம் | பகுதிகள் |
| பொறியியற் பீடம் | 1. குடியியல் பொறியியற் பகுதி |
| | 2. மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியற் பகுதி |
| | 3. கணினிப் பொறியியற் பகுதி |
| | 4. துறைசார் கற்கைகளுக்கிடையிலான பகுதி.". |

திசாநாயக்க முதியான்சலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2012, நவெம்பர் 30.

12 – 536

ச. வ. பீ. 21/78 iv.

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 1996, மாச்சு 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவையும், முறையே 2005, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1412/35 ஆம் இலக்க மற்றும் 2011, யூன் 24 ஆந் திகதிய 1711/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டவையுமான கட்டளைகளின் மூலம் பின்னர் திருத்தப்பட்டதுமான கட்டளையை இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்துகின்றேன்:-

(1) 2005, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1412/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (1) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஈ) அட்டவணை I இல் தரப்பட்டுள்ள பீடங்களை அத்தகைய பல்கலைக்கழகத்துக்குக் குறித்தொதுக்குகின்றேன்; அத்துடன்.";

(2) 1996, மாச்சு 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(உ) இதற்கான அட்டவணை II இலுள்ள நிரல் I இல் தரப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும், அந்த அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.";

(3) 2011, யூன் 24 ஆந் திகதிய 1711/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (1) ஆம் விடயத்தில் காணப்படுகின்ற அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணைகளை இடுவதன் மூலமும்:-

### "அட்டவணை I

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட பீடங்கள்

1. கலைகள் மற்றும் பண்பாட்டுப் பீடம்.
2. முகாமை மற்றும் வர்த்தகப் பீடம்.
3. பிரயோக விஞ்ஞானப் பீடம்.
4. இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம்.
5. பொறியியற் பீடம்.

### அட்டவணை II

ஒவ்வொரு பீடத்தினதும் கற்கைப் பகுதிகள்

| நிரல் I<br>பீடம் | நிரல் II<br>கற்கைப் பகுதி |
|---|---|
| 1. கலைகள் மற்றும் பண்பாட்டுப் பீடம் | (அ) சமூக விஞ்ஞானங்கள் பகுதி<br>(ஆ) மொழிப் பகுதி<br>(இ) புவியியற் பகுதி |

| | | |
|---|---|---|
| 2. | முகாமை மற்றும் வர்த்தகப் பீடம் | (அ) முகாமைப் பகுதி<br>(ஆ) கணக்கியல் மற்றும் நிதிப் பகுதி |
| 3. | பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | (அ) உயிரியல் விஞ்ஞானங்கள் பகுதி<br>(ஆ) பௌதீக விஞ்ஞானங்கள் பகுதி<br>(இ) கணித விஞ்ஞானங்கள் பகுதி |
| 4. | இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | (அ) இஸ்லாமிய கற்கைகள் பகுதி<br>(ஆ) அரபு மொழிப் பகுதி |
| 5. | பொறியியற் பீடம் | (அ) குடியியல் பொறியியற் பகுதி<br>(ஆ) கணினி விஞ்ஞான மற்றும் பொறியியற் பகுதி<br>(இ) பொறிமுறை எந்திரவியற் பகுதி<br>(ஈ) மின்சார மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியற் பகுதி.<br>(உ) துறைசார் கற்கைகளுக்கிடையிலான பகுதி.”; |

(4) இருபத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2005, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1412/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

திசாநாயக்க முதியான்சலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2012, நவெம்பர் 30.

12 – 537

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.